**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/47** **2024.08.24**

**சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21**

**2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க**
**தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகள்**

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக நடாத்தப்படும் 2024 சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் தேருநர் ஒருவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்சொன்ன சனாதிபதித் தேர்தலுக்குப் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், வேறு அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் தேருநர் ஒருவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்களுடன் கலந்துரையாடி, உசாவியதன் பின்னர் குறித்த தேர்தலின் போது போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளக்கூடிய செலவின எல்லை தேருநரொருவருக்கு ரூ.109.00 என்று தேர்தல் ஆணைக்குழு நிர்ணயித்துள்ளது.

| **தொ. இல.** | **விபரம்** | **செலவின எல்லை (ரு)** |
|---|---|---|
| 01. | 2024 சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுகின்ற வேட்பாளருக்கு ஒதுக்கப்பட்ட தொகை (60%) | 1, 120,979,151.60 |
| 02. | 2024 சனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளரொருவரை தோற்றச்செய்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது வேறு அரசியல் கட்சி அல்லது தேருநருக்கு செலவிடக்கூடிய தொகை (40%) | 747,319,434.40 |
| **மொத்தம்** | | **1,868,298,586.00** |

02. தேர்தல் பிரச்சார செலவினங்கள் அடங்கிய செலவின விபரத்திரட்டு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு 21 (இருபத்தொரு) நாட்களுக்குள் வேட்பாளரின் கையொப்பம் சத்தியப்பிரமாண ஆணையாளரினால் அல்லது சமாதான நீதவானினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

03. வேட்பாளர் சார்பாக பெறப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் அத்துடன் அத்தகைய நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் பொருளாகவிருப்பின் அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியும் மேற்குறித்த கொடை, கடன், முற்பணம் அல்லது வைப்பு என்ற வகையாக அன்பளிப்புச் செய்யப்பட்டதா என்ற விபரமும் குறிப்பிடப்பட வேண்டும்.

04. இது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கி தேர்தல் ஆணைக்குழுவினால் 2397/66 ஆம் இலக்கமும் 2024.08.16 ஆம் திகதியும் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்